## அரசு சேவைகளின் தரத்தினை உயர்த்தவும் – சாதனைகளை உருவாக்கவும்

# மாநில திட்டக் குழுவால் - கொள்கை ஆளுகைக்கான அனுபவ மையம்!

### சட்டப்பேரவையில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 30–**

**சட்டப்பேரவையில் துணை முதல்வர் அவர்கள், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை தொடர்பாக வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:–**

**1. மாநில திட்டக் குழுவால் கொள்கை மற்றும் ஆளுகைக்கான அனுபவ மையம் (Policy and Governance Experiential Centre) அமைக்கப்படும்.**

(The State Planning Commission will establish the Policy and Governance Experiential Centre).

அரசு முதன்மைத் திட்டங்களை நிகழ்நேரத்தில் கண்காணித்தல் மற்றும் காட்சிப்படுத்துதல்மூலம் திட்டங்களை மேம்படுத்துதலுக்கும், தரவு சார்ந்த கொள்கை வகுத்தலுக்கும், அரசு ஆளுகையில் புத்தாக்கத்தை துரிதப்படுத்தும் தொழில்நுட்பங்களைப் புகுத்துவதற்கும், அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முன்கணிப்பு மாதிரிகளை உருவாக்கும் ஆற்றல் மிக்க அமைப்பாக இம்மையம் செயல்படும்.

மேலும், இம்மையமானது மாநிலத்தின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய, சான்றுகளின் அடிப்படையிலான கொள்கை வகுத்தலுக்கு உகந்த சூழ்நிலையை வழங்குவதோடு, தமிழ்நாடு அரசின் பொது நிருவாகம் மற்றும் ஆளுகையின் செயல் திறனையும், அரசு சேவைகளின் தரத்தினையும் உயர்த்தும் மையமாகவும், சாதனைகளை உருவாக்கும் மையமாகவும் செயல்படும்.

**2. அரசுத் துறைகளில் ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுக்கும் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக "பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் பிரிவு" அமைக்கப்படும்.**

("Economics and Statistics Wing" will be established in Government Departments for EvidenceBased Policy making).

அரசுத் துறைகளில் தரவு சேகரிப்பதற்காகவும், பகுப்பாய்வு செய்வதற்காகவும், ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட அரசு திட்டங்களை உருவாக்கவும், அவற்றைச் செயல்படுத்தவும் "பொருள்இயல் மற்றும் புள்ளி இயல் பிரிவு" அமைக்கப்படும்.

தொடர்புத் துறைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்தறிந்து, அதன் ஆதாரங்களைப் பயன்படுத்தும் வகையில் துறையினை மறுசீரமைப்பு செய்யும் விதமாக, இந்த பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் பிரிவானது அமைக்கப்படும். இது மாநில அரசின் ஒரு முன்னோடித் திட்டமாக அமையும்.

**சிறப்பு தகவல் தொழில்நுட்பப் பிரிவு!**

**3. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் தலைமையிடத்தில் சிறப்பு தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஒன்று அமைக்கப்படும்.**

(A specialized IT Unit will be established in the Headquarters of Economics and Statistics Department).

பல்வேறு செயல்பாடுகளுக்கான மென்பொருள் உருவாக்குவதற்காகவும், பயன்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காகவும், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் தலைமையிடத்தில் ஒரு சிறப்பு தகவல் தொழில்நுட்பப் பிரிவு (IT Unit) அமைக்கப்படும். தமிழ்நாடு அரசின் கொள்கை அமைத்தல் மற்றும் செயல்படுத்தல் பணிகளுக்காக, இந்தத்தகவல்தொழில்நுட்பப் பிரிவின் மூலம், மாவட்டம், கோட்டம் மற்றும் வட்டார நிலைகளில் தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்படும்.

**ரூ.200 லட்சத்தில் ஆய்வு முறைகள்!**

**4. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் ஆய்வு முறைகள் ரூ.200.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.**

(The survey methods of Department of Economics and Statistics will be modernized at a cost of Rs. 200.00 lakh).

பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் சமூகபொருளாதார செயல்பாடுகள் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அரசின் ஆலோசனைப்படி தேவையான ஆய்வுகளும் செய்யப்படுகின்றன. ஆய்வு முறைகள் ஆற்றல் மிக்க புதிய தொழில்நுட்பங்களுடன் புதுப்பிக்கப்படுவதனால், ஆய்வுகள் முழுவதுமாக இணையதளத்தில் நடத்தப்படும். ஆய்வு முறைகளை நவீனப்படுத்தும் இந்தத் திட்டம் ரூ.200.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**ரூ.270 இலட்சத்தில் பணியாளர்களுக்கு திறன் பயிற்சி!**

**5. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மேம்பாட்டிற்காக, பணியாளர்களுக்கு திறன் பயிற்சி ரூ.270.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.**

(To improve the functioning of Economics and Statistics Department, capacity building of the officials will be undertaken at a cost of Rs.270.00 lakh).

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் தலைமையிடம், மண்டலம், மாவட்டம், கோட்டம் மற்றும் வட்டார நிலைகளில் புள்ளிஇயல் உட்கட்டமைப்பை மேம்படுத்தி, தரவு சேகரிப்பு, தொகுப்பு, பகுப்பாய்வு ஆகியவற்றை சிறப்பாக செயல்படுத்தும் வகையில், பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காகவும், புள்ளிஇயல் கணக்கீட்டிற்கான அடிப்படை மென்பொருள் முறைகளைத் தெரிந்து கொள்வதற்காகவும், ஆண்டுதோறும் 30 அலுவலர்கள் அடங்கிய 20 குழுக்களுக்கு நவீன புள்ளிஇயல் முறைகளில் 5 ஆண்டுகளுக்கு ரூ.270.00 இலட்சம் செலவில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

---

## ஆப்பக்கூடல் பேரூர்க் கழகச் செயலாளர்

# கே.கோபாலகிருஷ்ணன் மறைவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 30–

பவானி சட்டமன்றத் தொகுதி பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆப்பக்கூடல் பேரூர் கழகச் செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் மறைவிற்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:–

பவானி சட்டமன்றத் தொகுதி, பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆப்பக்கூடல் பேரூர் கழகச் செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்பதை அறிந்து மிகவும் துயருற்றேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் ஆப்பக்கூடல் பேரூர் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வாணியம்பாடி வீ. சிவாஜிகணேசன்**

**மார்ச் 30 (2015)**



வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர்.

வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக 10 ஆண்டுகளும்; வாணியம்பாடி நகர்மன்ற தலைவராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவராகவும், வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தென்னக ரயில்வே துறை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

முதல் கட்டமாக

# 10 தொகுதிகளில் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் பணிகள்!

### விரைந்து எடுக்கப்படும் என - சட்டப் பேரவையில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 30-*

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அளித்த பதில்கள் வருமாறு:-



**ஏ.ஆர்.ஆர். ரகுராமன்:** (அ) சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி, 7வது வார்டில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர்: வி.செந்தில் பாலாஜி:** சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி 7வது வார்டில் தனி மின் மாற்றி அமைத்து 2024 ஆம் ஆண்டில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாத்தூர் தொகுதிக்கு என்று செயற்பொறியாளர் அலுவலகம் இல்லை என்ற நான் சட்டப்பேரவையில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், 64 தொகுதிகளுக்கு செயற்பொறியாளர் அலுவலகம் இல்லை என்று கண்டறியப்பட்டு, முதல் கட்டமாக 10 தொகுதிகளுக்கு செயற்பொறியாளர் அலுவலகம் ஒதுக்கப்பட்டது, அதில் சாத்தூ ரும் ஒன்று. எனவே, இந்த செயற்பொறியாளர் அலுவலக பணிகள் எப்போது முடியும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, சாத்தூர் நகரத்திற்கு இருவழிச்சாலை மின்பாதை அமைத்துத்தரும்படி, வேண்டிகேட்டுக்கொள்கின்றேன்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** செயற்பொறியாளர் அலுவலகம் இந்த மாதத்தினுடைய இறுதியிலிருந்து பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, உறுப்பினர் அவர்கள் இருவழி மின்பாதையை கேட்டிருக்கின்றார். துறையின் சார்பாக ஆய்வு செய்யப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல 2,366 புதிய மின் மாற்றிகள் விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் சாத்தூர் தொகுதியில் மட்டும் 265 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மீதம் ஏதேனும் தேவைப்பட்டால் துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, அதையும் அமைத்துத் தரப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஏ.ஆர்.ஆர். ரகுராமன்:** மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இருவழி மின்பாதையை இந்த ஆண்டு நீங்கள் செய்து கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** ஏற்கெனவே சொல்லியிருந்தேன். இந்த ஆண்டு, துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு தேவையெற்படின் முன்னுரிமை வழங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கு.மரகதம் குமரவேல்:** எனது மதுராந்தகம் தொகுதியில், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் எல். எண்டத்தூரில் எப்போது துணை மின் நிலைய யப்பணிகள் தொடங்கும் என்று அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்பு கின்றேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** இந்த ஆண்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெ.சு.தி. சரவணன்:** கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலசப்பாக்கத்தில் இயங்கி வரும், உதவி கோட்ட பொறியாளர் மின் அலுவலகம், ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது அந்தக் கட்டடத்தின் உரிமையாளர், அந்த அலுவலகத்தை காலி செய்ய வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். அமைச்சர் அவர்கள் அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். நாங்கள் இடம் கொடுப்பதற்கு தயாராக உள்ளோம். வட்டாட்சியர்மூலம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இடம் கொடுப்பதற்கான proposal அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** என்னுடைய துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, சட்டமன்ற உறுப்பினர் அவர்களை சந்தித்து, அதற்கான இடத்தை தேர்வு செய்து, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்லூர் கே.ராஜு:** அமைச்சர் அவர்கள், மதுரை (மேற்கு) தொகுதியில், பெத்தானியாபுரத்தில் இரண்டு தெருக்கள் வழியாக 110kv, தாழ்ந்த நிலையில், கை எட்டும் தூரத்தில் மின் வழித்தடம் இருக்கிறது. அதை மாற்றியமைக்கவேண்டுமென்று, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் அதிலும் நான் கொடுத்தி ருந்தேன். இப்போது ரூ.3¼ கோடி அளவிற்கு, அதற்கான estimate போட்டிருக்கிறார்கள். அது எப்போது நிறை வேற்றப்படும், இரண்டு ஆண்டுகளாக அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தலையிட்டு, அதை முடித்துக்கொடுப்பா ரா என்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய உயிரிழப்பு ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** மதுரை (மேற்கு) தொகுதியில் 218 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதே போல 3 புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளும், துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும், இந்த ஆண்டு அதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவில் அதற்கான பணிகள் துறையின் மூலமாக மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பதிலளித்தார்.

---

# 7-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 27.02.1984

மறைவு : 30.03.2018

திருமதி. **ர.கனிமொழி** M.Sc.,M.Phil.,

வானத்தில் நிலவாய்... வையகத்தில் தென்றலாய்...
எங்கள் இதயத்தில் என்றென்றும் வாழும் உனக்கு

**எங்களது இதய அஞ்சலி**

பெற்றோர் : **ப.கோவிந்தராசன்** M.A.,
கீழ்வேளூர் ஒன்றிய கழக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர்
**வசந்தி கோவிந்தராசன்**

மற்றும் **குடும்பத்தினர்கள், நண்பர்கள்**
இராதாமங்கலம், கீழ்வேளூர் ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்